
# கலைஞரும் கல்வியும்





டாக்டர் பொன். கோதண்டராமன்
(பொற்கோ)
சென்னைப் பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர்

தமிழ்நாடு எப்போதும் கல்விக்கு மிகப் பெரிய அளவுக்குச் சிறப்பிடம் தந்த மாநிலம். இந்த அளவுக்குத் தொடர்ந்து கல்விக்குச் சிறப்பிடம் தந்ததாக வேறொரு மாநிலத்தையோ, நாட்டையோ காட்ட முடியாது. பள்ளிப் பருவத்திலிருந்தே கல்விக்கு மிகச் சிறப்பான இடம் தந்து வளர்ந்தவர் கலைஞர். மிக இளம் வயதிலேயே கல்விக்கு இந்த அளவுக்குச் சிறப்பிடம் தந்தது நமக்கு வியப்பாகத்தான் இருக்கிறது. பொது மக்களின் நலனுக்காக இடைவிடாமல் சிந்தித்தவர் அவர். அதோடு வரலாற்றுக் கண்ணோட்டம் உடையவராகத் தமிழ்நாட்டு வரலாற்றை நன்றாகத் தெரிந்து கொண்டவர் அவர். இந்த வரலாற்று உணர்வு அவருடைய வாழ்வில் பல் வேறு வகையில் வியப்புக்குரிய வகையில் பயன் பட்டிருக்கிறது.

இயல்பாகவே நகைச்சுவை உணர்வு கொண்டவர் கலைஞர். இன்ப துன்பம் எது வந்தாலும் அங்கெல்லாம் அவருடைய நகைச்சுவை உணர்வு தெளிவாக வெளிப்படும். அழுதுகொண்டிருப்பவரைக்கூட அவரிடம் இந்த உணர்வு சிரிக்க வைத்துவிடும். இவையெல்லாம் கல்வி உணர்வோடு கலந்துதான் வெளிப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு வரலாற்றில் மிகப்பெரிய அளவுக்குக் கல்விக்கு இடம் தந்தவர் அவர். காமராசர் வளர்த்தெடுத்த கல்வி உணர்வைத் தங்குத் தடையில்லாமல் இடையூறு இல்லாமல் மேலும் சிறப்பாக கலைஞர் வளர்த்தார். மொழியுணர்வுக்கு மிகப்பெரிய இடம்கொடுத்து இளைய சமுதாயத்திடம் தமிழ் உணர்வையும் தமிழ்ப் பற்றையும் அவர் வளர்த்தெடுத்திருக்கிறார்.

இலக்கியத்தைப் பொறுத்தவரையில் அவர் தொடாத காலப்பகுதி இல்லை, தொடாத இலக்கியப் பகுதியும் இல்லை. சங்க இலக்கியம் முழுமையும் அவர் பார்வைக்கு இடம் கொடுத்திருக்கிறது. மிக நுட்பமான இடங்களையெல்லாம் தொட்டுக் காட்டிச் சங்கத்தமிழை மக்கள் மனங்கொள வழங்கியிருக்கிறார். திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம் ஆகிய இந்த அரிய நூல்களிலெல்லாம் அவருடைய பார்வை பட்டிருக்கிறது. தொல்காப்பியத்தைத் தொடாதவர்களும் தொல்காப்பியம் என்ற நூலைக் கேள்விபடாதவர்களும் தொல்காப்பியத்தோடு தொடர்பு கொள்ளுகிற அரிய வாய்ப்பினை உருவாக்கியவர் கலைஞர் தானே. பொதுமக்களுக்கு இவற்றில் ஆர்வம் ஏற்பட அவர் வழி வகை செய்திருக்கிறார். தமிழ் இலக்கியங்களில் எப்போதும் வரலாற்றையும் வாழ்வியலையும் பொதிந்து வைத்து மக்களுக்கு ஊட்டியிருக்கிறது. அவருடைய எழுத்துகளில் இந்தச் செய்திகள் எல்லாம் வெளிப்படுகின்றன. கல்விக்கு மிகப்பெரிய இடம் கொடுத்து கலைஞர் வெறும் எழுத்தையும் பேச்சையும் கற்பிக்கவில்லை. அவருடைய எழுத்துகளில் வரலாற்றையும் பண்பாட்டையும் ஆளுமை உருவாக்கத்தையும் வழங்கியிருக்கிறார்.

மொழிக்கு இந்த அளவில் அக்கறைகாட்டி ஆக்கம் செய்தவர்கள் வேறு யார்? திருக்குறளுக்கு இவர் செய்த அளவுக்குச் சிறப்பு செய்தவர்கள் வேறு யார்? தமிழறிஞர்களை இவர் போற்றிய அளவுக்குப் போற்றியவர் வேறு யார்? மண்ணுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் இடைவிடாது பாடுபட்ட பெருந்தகை அவர்.

நடுநிலை நோக்கோடு ஆழமாய் எண்ணிப் பார்த்தால் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வரலாற்றிலும் இவரைப் போல் ஈடுபாடு கொண்டு பணி செய்தவராக வேறு ஒரு தலைவரை நம்மால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் எண்ணிப் பார்த்தால் முதல்வராக இவர் தமிழ்நாட்டிற்குக் கிடைத்தது ஒரு பெரும்பேறு என்று சொல்ல வேண்டும். நன்றியுணர்வோடு தமிழ்நாடு அவரைப் போற்றுதல் எப்போதும் தகும்.

# அண்ணா வழிநின்று எந்நாளும் செயல்படுவோம்!



**தா**ழ்த்தப்பட்ட மக்கள் - பிற்படுத்தப்பட்ட மக்கள் - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் - நடுத்தர மக்கள் - அலுவலர்கள் - அனைத்துத் தொழிலாளர்கள் எல்லோரது பிரச்சினைகளையும் மையமாக வைத்து, அரசின் சக்கரம் சுழல வேண்டுமென்ற அண்ணா அவர்களின் வழி நின்று, நாளும் செயல்படும் இந்த அரசு !

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை காத்து, தமிழர் கொற்றம் சிறக்கப் பணியாற்றுவோம் !

நாட்டுக்குழைத்த நல்லோர் வழியில் நடைபோடுவோம்!

உத்தமர் காந்தியடிகள் ‘உண்மையே கடவுள்’ என்றார்!

அறிஞர் அண்ணா ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்றார் !

‘கைமாறு கருதாமல் கடமையைச் செய்’ என்றார் தந்தை பெரியார் !

‘உழைப்பே உயர்வு தரும்’ என்றார் பெருந்தலைவர் காமராசர் !

இவர்தம் எண்ணமெல்லாம் தமிழர்தம் வாழ்வில் வண்ணமாகப் பொலிவுறத் தக்கபடித் தொண்டாற்றத் தூய சபதம் ஏற்றிடுவோம் !

- கலைஞர்